**தலைப்பு 272 - குருணாகலை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 272 குருணாகலை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 17 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 1601.22 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,584.66 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 16.56 மில்லியன் அதாவது 1.03 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

| செலவினம் | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 1,547.22 | 1.540.57 | 6.65 | 0.43 |
| மூலதனம் | 54.00 | 44.09 | 9.91 | 18.00 |
| மொத்தம் | 1,601.22 | 1,584.66 | 16.56 | **1.03** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 32 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் முறையே ரூபா 7,441 மில்லியன் மற்றும் ரூபா 1,388 மில்லியன் ஆக ரூபா 8,829 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 7,036 மில்லியன் மற்றும் ரூபா 1,277 மில்லியன் ஆக ரூபா 8,313 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் முறையே ரூபா 405 மில்லியன் மற்றும் ரூபா 111 மில்லியன் என ரூபா 516 மில்லியன் கூட்டுத்தொகை அதாவது 5.56 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 27201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 85.66 | 69.71 | 78.00 | 91.36 | 300.00 | 252.70 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 07 வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 974.03 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6003/0000/00/0048/0000/000 | 7.70 |
| 6000/0000/00/0001/0068/000 | 2.33 |
| 6000/0000/00/0013/0060/000 | 119.37 |
| 6000/0000/00/0016/0042/000 | 526.07 |
| 6000/0000/00/0017/0013/000 | 14.63 |
| 6000/0000/00/0018/0054/000 | 3.93 |
| 6000/0000/00/0011/0600/000 | 300.00 |
| மொத்தம் | 974.03 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்பு

மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

### 3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 29,156,582 கூட்டுத்தொகையான 30 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6000/0000/00/0011/0600/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் கீழ் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 300,000,000 தொகையான பொது வைப்பு மீதிகள் தொடர்பாக போதியளவான விடயங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

27201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,305,907 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 11 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) பொல்பித்திகம பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று ஒரு வருடத்திற்கு அண்மித்த காலமாக பழுதுபார்க்கப்படாது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. தண்ணீர் பவுசர் மற்றும் இரண்டு சக்கர குபோட்டா டெக்ரர் என்பன பாவனையிலிருந்து நீக்கப்பட்டமையின் காரணமாக பல வருடகாலமாக அலுவலக வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

(ஆ) கனேவத்த பிரதேச செயலகத்தில் ஹிரிபிட்டிய நகரத்திற்கு அண்மையில் 80 பேர்ச் அளவான அரசின் காணி மற்றும் அதில் நடாத்திச் செல்லப்பட்ட விருந்தினர் விடுதி என்பன 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது உடைந்து விழும் நிலையில் காணப்பட்டது.

(இ) கொட்டவெஹெர பிரதேச செயலகத்தில் பாவனைக்கு எடுக்கப்படாத 06 வாகனங்கள் பலவருட காலமாக அலுவலக வளவில் துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது.

(ஈ) கொட்டவெஹெர பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி மழைநீரினால் துருப்பிடித்தமையால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு 06 மாதகாலம் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 இணங்காமைகள்

#### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| | துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 5(1), 23(3) மற்றும் 22(2)(எ) பிரிவுகள் மற்றும் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதிய பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் MOD/CIS/3/F/2/2016/01 ஆம் இலக்க கடிதம் | 10 பிரதேச செயலகங்களில் 64 துப்பாக்கி உரிமையாளர்கள் பல வருட காலமாக துப்பாக்கி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சற்றறிக்கை | குருணாகலை மாவட்ட செயலகத்தின் 03 வாகனங்களும், மல்லவப்பிட்டிய, கனேவத்த, பிங்கிரிய, உடுபத்தாவ பிரதேச செயலகங்களுக்குரிய வாகனங்களுக்காக எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை 06 மாதங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(இ) மாவட்ட செயலகத்தின் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2011 யூன் 14 ஆந் திகதிய குருணாகலை மாவட்ட செயலாளரின் கட்டளை இல. 1/2011 | எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் சமர்ப்பிக்க வேண்டிய சகல உத்தியோகத்தர்களும், அதற்கு முன்னைய மாதத்தின் 25 ஆந் திகதியளவில் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகத்தினதும் பொல்பித்திகம, குளியாப்பிட்டிய, (கிழக்கு), உடுபத்தாவ, அளவ்வ, வாரியபொல, நாரம்மல போன்ற பிரதேச செயலகங்களில் சில கள உத்தியோகத்தர்கள் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டமை, செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள கனேவத்த பிரதேச செயலகத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 15,149,682 கூட்டுப்பெறுமதியான 22 செயற்திட்டங்கள் அதிக மழையினால் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் நலன்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிக்கவெரட்டிய பிரதேச செயலகப் பிரிவிற்குரிய ஹெவென்பெலஸ்ஸ விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் ‘‘ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 490,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், விளையாட்டு மைதானத்தின் ஒரு மூலையில் பாரியளவான வளைவு காணப்பட்டமையால் அதனைப் பயன்படுத்துபவர்களுக்கு ஆபத்தானதாக இருந்தது.

(ii) வாரியபொல பிரதேச செயலகப் பிரிவில் வாரியபொல விஷேட பொருளாதார நிலையம் அதற்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில் திறக்கப்பட்டு வெற்றியளித்திருக்காத போதும் மீண்டும் ஒரு தடவை சாத்தியவள

ஆய்வின்றி 2015 யூன் மாதத்தின் போது திறக்கப்பட்டு அதற்காக ரூபா 741,565 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் மாதம் அளவில் இந்த நிலையம் மீண்டும் பயன்படுத்தப்படாது மூடப்பட்டிருந்தது.

(iii) மல்லவப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவிற்குரிய ஹேவாபொல கம மெத வீதியை கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 459,005 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் வீதியின் மத்தியில் 20 அடி அளவிலான நீளப்பகுதி உடைந்திருந்தது.

(iv) மல்லவப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவிற்குரிய பல்நோக்குக் கட்டிடத்திற்காக ரூபா 1,152,738 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் முற்பக்க மேடைக்கு அருகில் சுவரின் இருப்பக்கமும் உடைந்து செல்கின்றமை, மேடையின் அருகில் சீமெந்து நிலம் வெடித்திருந்ததுடன் கூரையின் சில இடங்கள் உடைந்திருந்தது.

(v) பண்டுவஸ்நுவர (கிழக்கு) பிரதேச செயலகப் பிரிவில் கலகெதற கிராம உத்தியோகத்தர் பிரிவில் கோன்கும்புறவிற்கு செல்லும் வீதியில் மதகொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 381,957 தொகை திமுனுவ கிராம சமுர்த்திச் சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அமைக்கப்பட்டிருந்த மதகு போதியளவில் இல்லாமையினால் மதகின் கீழ் வீதியின் மேலாக நீர் அடித்துச் சென்றமையால் வீதி உடைந்திருந்தது.

(vi) உடுபத்தாவ பிரதேச செயலகப் செயலகப் பிரிவில் 2014 இன் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பழுகமுவ மெதிரிய வெவவின் அணைக்கட்டு கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 1,974,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், குளத்தின் நீரை தேவையான இடங்களுக்கு கொண்டு செல்லும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(vii) உடுபத்தாவ பிரதேச செயலகப் பிரிவில் 2014 இன் தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தும்மலசூரிய வீஹேன வீதியின் அணைக்கட்டு கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 1,472,107 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் அந்த அணைக்கட்டு நீரில் மூழ்கியிருந்தது.

(viii) பன்னல பிரதேச செயலகப் பிரிவிற்குரிய வலகும்புறுமுல்ல குடிநீர் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,096,399 செலவில் கிணறொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், நீர் பம்பிக் கூடம், நீர் தாங்கி நீர்க்குழாய் முறைமை மற்றும் நீர்ப்பம்பிகள் என்பன நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 நட்டமும் இழப்பும்

ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் மேலும் அறவிடுவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கிருந்த ரூபா 3,856,240 கூட்டுமொத்தம் நட்டமாக இருந்ததுடன் ரூபா 131,011 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதியாகும்.

### 3.8 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொபெய்கனே, நிக்கவெரட்டிய மற்றும் வாரியபொல பிரதேச செயலகப் பிரிவுகளில் 70 வயதினை விஞ்சிய முதியோர்களுக்கு தொடர்ச்சியாக முதியோர் வாழ்வாதார

படி வழங்கப்படாமை தொடர்பாக பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர்களின் காரணங்கள் ஆராயப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகத்தின் பொறியியல் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொத்த வேலைப்பெறுமதி ரூபா 1,497,110,430 தொகையான 76 செயற்திட்டங்கள் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 10 உத்தியோகபூர்வ மற்றும் குழாம் வாகனங்களுக்காக 08 சாரதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஈ) 2014/2015 பெரும்பொக பயிர்ச் செய்கையின் பின்னர் அளவ்வ பிரதேச செயலகப் பிரிவில் விவசாயிகளின் வேண்டுதல் இல்லாமலும் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரமும் விதைநெல் மானியமாக ரூபா 10,330,672 தொகை விவசாயிகளுக்கு பணமாக வழங்கப்பட்டிருந்தது. விதைநெல் மானியத்தைப் பெற்ற விவசாயிகளினால் நெல் விதைக்கப்பட்டமைக்கு பின்தொடர் நடவடிக்கை மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 123,690 தொகையான விதைநெல் மானியங்களைப் பெற்ற 78 விவசாயிகளினால் உர மானியம் பெறப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் செலுத்தப்பட்ட விதை நெல் மானியம் நெற்பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 128 | 119 | 10 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 76 | 57 | 20 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 3,784 | 3,500 | 314 | 30 |
| (iv) | ஆரம்ப நிலை | 312 | 276 | 37 | 01 |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 4,300 | 3,956 | 381 | 37 |

பொது நிர்வாக, வெளிநாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2011 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 12/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமும் 2011 செப்தெம்பர் 08 ஆந் திகதிய 16/2011 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களின் வருடாந்த பணியிடமாற்ற நடைமுறையின் தத்துவங்களைப் பின்பற்றி ஏனைய சகல அரச சேவைகளுக்குமான பணியிடமாற்றத் திட்டமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும், குருணாகலை மாவட்ட செயலகத்திலும் 30 பிரதேச செயலகங்களிலும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஒரு சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர்.